# 25. கி.மீ. நீளத்திற்கு சாலையின் இருமருங்கிலும் மக்கள் அணிவகுத்து நின்று – முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு வழங்கிய மகிழ்ச்சியான வரவேற்பும் – மனம் நிறைந்த நன்றியும்!










டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான ஏல உரிமையை இரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி, திட்டத்தை இரத்து செய்ய உறுதியான நடவடிக்கை எடுத்தமைக்காக மதுரை மாவட்டம், அரிட்டாபட்டி கிராம மக்கள் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (26.1.2025) நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில், அக்கிராம மக்களிடையே முதலமைச்சர் அவர்கள் ஏற்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எம்.எஸ். சங்கீதா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான ஏல உரிமையை இரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டதற்காக மதுரை மாவட்டம், அரிட்டாபட்டி, வல்லாளப்பட்டி உள்ளிட்ட சுற்றுவட்டார கிராம மக்கள் நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (26.1.2025) மதுரைக்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



மதுரை மாவட்டம் அரிட்டாபட்டி மற்றும் வல்லாளப்பட்டியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பங்கேற்பதற்காக மதுரை வந்த கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை விமான நிலையத்தில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் – வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வரவேற்றார்.






டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான ஏல உரிமையை இரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டதற்காக மதுரை மாவட்டம், அரிட்டாபட்டி, வல்லாளப்பட்டி உள்ளிட்ட சுற்றுவட்டார கிராம மக்கள் நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (26.1.2025) மதுரைக்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.